முருகப்பெருமான் துணை

**மகான் திருமாளிகைதேவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. தானதரும சக்திபலம் கொண்ட
தவராஜனே ஆறுமுக அரங்கனே
வானவர்கள் மெச்சும் வள்ளலே
வாழும் ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சால் திங்கள்
குறைவிலா இருபான் திகதி கதிர் வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 20 ம் நாள், 03.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
திருமாளிகைதேவர் யானும் உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கமகான் மார்க்கம்
உயர்வான ஞான மார்க்கமாகும்
குறைவின்றி கலியுக மக்கள்
குருவேயென அரங்கனை நாடி
4. நாடியே தீட்சை உபதேசம்
ஞாலமதில் ஏற்று வழிபட்டு
தேடியே அன்னதான சேவையில்
தெரிவிக்க பொருளுதவி செய்து
5. செய்துமே ஞானிகள் பூசை
செபதபமாக அனுதினம் செய்து
மெய்ஞானம் அடையும் வண்ணம்
மேலான சைவநெறி தனை
6. நெறிதனை கடைபிடித்துவர
நீதியெனும் வாழ்க்கை முறை
அறிவுத் தெளிவுற நிலை தேறி
அரங்கனின் உண்மைச் சீடர்களாகி
7. ஆகியே அடையாளம் கண்டிட
அனைவருக்கும் உலகம் தன்னில்
மகிழவே வானவர்கள் மெச்ச
மறுமை மரணம் வெல்லும் சக்திகூடி

8. சக்திகூடி சற்குரு அரங்கன் தயவில்
சகலரும் ஞானிகள் ஆவர்
சக்திபட கலிகால சிக்கல்கள்
சகலதும் வெல்லும் பலம்கூடி
9. கூடியே ஞானவான் படைகளாக
குவலயம் எங்கிலும் நிரம்பியே
நாடியே ஞான சபை அமைத்து
ஞான ஆட்சிதனை படைப்பர்
10. படைக்கவே ஞானசித்தர் காலம்
பார்த்துரைக்க ஞானயுக மாற்றமாக
தடையற கண்டு சிறந்துமே
தரணியில் அற்புதம் நிகழும்
11. நிகழவே அரங்கன் அவதாரம்
நிலவுலகை மாற்றும் அவதாரம்
வகைபட உலகோர் வணங்கி
வரம்பெற எல்லாம் வெற்றி காண்கும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—